**செய்தி வெளியீடு எண்: 073** **நாள் : 02.02.2016**

## பொதுவிருந்து நிகழ்ச்சி

பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி சென்னை உள்பட தமிழ்நாடு முழுவதும் 03.2.2016 அன்று 319 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நடைபெறுகிறது. இதில் மாண்புமிகு சட்டபேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

சென்னை, திருவொற்றியூரில் உள்ள அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் நடைபெறும் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்தில் சட்டபேரவைத் தலைவர் கலந்து கொள்கிறார். திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், தேனாம்பேட்டை அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் மற்றும் சைதாப்பேட்டை காரணீஸ்வரர் திருக்கோயிலில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். சென்னையில் 32 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நடைபெற உள்ளது.

மாநிலத்தின் பிற இடங்களில் அண்ணா நினைவு நாளையொட்டி சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நடைபெறும் திருக்கோயில்களில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**